# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.

முன்னிலை: முனைவர் ச. கண்ணப்பன்
**ந.க.எண். 30267 /அ1/ 2019 நாள்: 05.07.2019**

பொருள் பள்ளிக் கல்வி – EMIS இணையதளத்திதன் மூலம் விவரங்கள் பெறுதல் – பள்ளி நேரங்களில் விவரங்கள் அளிக்க பள்ளியை விட்டு வெளியே செல்லுதல்– மின்னஞ்சல் மூலம் விவரங்கள் அனுப்புதல்– தொடர்பாக.

----

பள்ளி கல்வி துறையின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் விவரங்கள் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி விவரங்கள் EMIS இணையதளத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே இத்தகைய விவரங்களை கோரம் போது EMIS இணையதளத்தின் மூலம் பெற்று அனுப்புமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதனால் பள்ளி வேலை நேரங்களில் விவரங்களை பெறுவதற்காக தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வு கூட்டத்தினை நடத்த வேண்டிய அவசியம் எழாது. இதர முக்கியமான காரணங்களுக்கான ஆய்வு கூட்டத்தினை நடத்த வேண்டிய சூழ்நிலையில் சனிக்கிழமையிலோ அல்லது மாலை நேரங்களிலோ நடத்திடுமாறு அனைத்து முதன்மை அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தலைமையாசிரிகள் மற்றும் ஆசிரியர்கள், பள்ளி வேலை நேரங்களில் விவரங்களை அளிக்கவும் பெறவும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம், வட்டார கல்வி அலுவலகம் செல்வதை தவிர்க்கப் பட வேண்டும் என அறிவுறுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவரங்களை மின்னஞ்சல் மூலமாக அனுப்பலாம். இவ்வாறு செய்வதால் கல்விப் பணிகள் பாதிக்காது. எனவே மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளி நேரங்களில் விவரங்களை அளிக்க வெளியே செல்ல தவிர்க்குமாறு அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்க அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

நகல் அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை – 9 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.